// மிக முக்கியம் //

சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் , சென்னை-08

ந.க.எண். 2482/அ5/2022 நாள். 05.05.2022.

பொருள் : பள்ளிக் கல்வி –பொதுத் தேர்வுகள் – மே-2022, இடைநிலை மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் நடைபெறுதல் – 6,7,8 மற்றும் 9 ஆம் வகுப்புகள் நடைபெறுவது குறித்தான அறிவிப்பு - தொடர்பாக

பார்வை பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செய்திக் குறிப்பு

…………

பார்வையில் காணும் செய்திக் குறிப்பின்படி பின்வருமாறு செயல்பட தலைமையாசிரியர்/ முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

கோடை வெயிலின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து வருவதினால் மாணவர்களின் நலன் கருதியும், தேர்வுக்கு சிறந்த முறையில் தங்களை தயார்படுத்தி கொள்வதற்கு ஏதுவாகவும் 1 முதல் 9 ஆம் வகுப்புகள் வரை கல்வி பயின்று வரும் மாணவ- மாணவியர்கள், ஆண்டு இறுதித் தேர்வு கால அட்டவணைப்படி, தேர்வு நடைபெறும் நாட்களில் (முற்பகல் / பிற்பகல்) மட்டுமே தங்களது வருகையை பதிவு செய்வதை உறுதி செய்திட, சென்னை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில பள்ளிக் கல்வி வாரியப் பாடத் திட்டத்தினைப் பின்பற்றி செயல்பட்டு வரும் அனைத்து வகைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்ட்டுகிறார்கள்.

இவ்விவரத்தினை மாணவ,மாணவியர்களின் பெற்றோர்களுக்கும் தெரிவித்து தேர்வு நாளன்று மட்டும் தான் தங்களது குழந்தைகள் பள்ளிக்கு செல்கின்றனர் என்பதை உறுதி செய்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

- ஒம்/-

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை.

பெறுநர்

1. அனைத்து அரசுப் பள்ளிகள்/ சென்னை பள்ளிகள்/ அரசு உதவிபெறும் பள்ளிகள்/ ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள், சென்னை மாவட்டம்

நகல்

1. ஆணையர், பள்ளிக் கல்வி ஆணையரகம், சென்னை-06 தகவலுக்காகப் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
2. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-06 தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை-06 தகவலுக்காகப் பணிந்து அனுப்பலாகிறது.
4. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம் தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.
5. கல்வி அலுவலர், சென்னை பள்ளிகள், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.
6. வட்டாரக் கல்வி அலுவலர், சென்னை மாவட்டம், தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.